**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கி.மு. 200 ஆண்டிற்கு முற்பட்ட தமிழ் இலக்கண நூல் எது?
2. மருத நிலக் கடவுள் யார்?
3. பெண்ணைக் குடும்ப விளக்கு என்ற கவிஞர் யார்?
4. பழந்தமிழ்நாட்டில் இருந்த தமிழ்ச் சங்கங்கள் எத்தனை?
5. மணநூல் என்று எதற்குப் பெயர்?
6. பண்களில் முதலில் தோன்றியது எது?
7. மயிலுக்குப் போர்வை ஈந்த வள்ளல் யார்?
8. தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பூணூல் அணிவித்தவர் யார்?
9. 'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' – சொன்னவர் யார்?

10. சமணரின் புராண நூல் எது?
11. அகப்பொருள் பற்றிய இலக்கண நூல் எது?
12. பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதியவர் யார்?
13. உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதத் தூண்டியவர் யார்?
14. வள்ளலார் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர் யார்?
15. தமிழ்நாட்டுத் துறைமுகங்களைப் பற்றிக் கூறும் ஆசிரியர் யார்?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. வணிகத்தினால் பண்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
2. பன்முகப் பண்பாடு என்றால் என்ன?
3. விடுகதை பற்றிக் குறிப்பு வரைக.
4. தமிழகத்தில் பக்தி இயக்கத்தை வளர்த்தவர்கள் பற்றிக் கூறுக.
5. களவு வாழ்க்கை – குறிப்பு வரைக.
6. பத்தினிக் கோட்பாடு பற்றிக் கூறுக.
7. தமிழகத்தின் பழமையான ஓவியங்கள் யாவை?
8. இராணி மங்கம்மாள் – சிறு குறிப்பு வரைக.

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பண்பாட்டின் வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழரின் இலக்கியச் சிறப்பு குறித்து எழுதுக.

2. (அ) சிந்துவெளி நாகரிகத்தைத் திராவிடர் நாகரிகம் என்று கூறுவதற்கான காரணங்களை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரம் ஒரு பண்பாட்டுக் கருவூலம் என்பதை நிறுவுக.

3. (அ) திருக்குறள் போற்றும் அறவாழ்வு குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்நாட்டில் சமணர், பௌத்தர் பற்றிக் கட்டுரை வரைக.